திரு. ஆர். சி. சுப்பிரமணியம் : இருல் மீன்களை வியாபாரிகள் பவுண்டு கணக்கில் வாங்குகிருர்கள். 40 இருல் கொண்ட ஒரு கிலோவுக்கு ஒரு விலேயும், 60 இருல் கொண்ட ஒரு கிலோவுக்கு ஒரு விலேயும், 100 இருல் கொண்ட ஒரு கிலோவுக்கு ஒரு விலேயும் கொடுக்கிருர்கள். ஆகவே பெரிய இருல், சிறிய இருல் என்று பாராமல் இவைகளுக்கு ஒரே விலே கொடுத்து அரசாங்கம் வாங்கிக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் அரசிடத்தில் இல்லே.

திரு. ரெ. வீ. சவுந்தரராஜன் : தரமுள்ள மீன்களை வெளி நாட்டுக்கு அனுப்பிவிட்டு தரம் குறைந்த மீன்கள் மக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : அப்படி ஒன்றும் இல்லே.

*327 வினு.— திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட விணுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் இருல் வளர்ப்பு நிலேயம் எத்தனை உள்ளது?

(ஆ) அதில் தனியார் துறை எத்தனை அரசுத்துறை எத்தனை?

(இ) மேலும் தீவிரப்படுத்த அரசுக்கு உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :

(அ) மற்றும் (ஆ); தமிழ்நாட்டில் அரசுத்துறையால் நடத்தப்பெறும் இருல் வளர்ப்பு நிலேயங்கள் ஐந்து உள்ளன. தனியார் துறையில் ஏதும் இல்லே.

(இ) ஆம். சென்னைக்குத் தெற்கே 36 கிலோ மீட்டர் தொலேவில் உள்ள கோவளத்தில் ரூ. 4.24 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு விரிவான இருல் வளர்ப்புப் பண்ணை கட்டப்பட்டு வருகிறது.

தென்னுற்காடு மாவட்டத்தில் உள்ள கிள்ளேயில் மத்திய அரசின் உதவியுடன் ரூ. 16.52 இலட்சம் செலவில் ஒரு பெரிய இருல் வளர்ப்புப் பண்ணை அமைக்க இந்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

பழவேற்காடு ஏரி முழுமையும் பிரத்தியேகமாக அளவை செய்யப்பட்டு மலேச்சேரிக்குத் தெற்கே உள்ள இடம் இருல் வளர்ப்புக்குத் தகுந்தது என்று கண்டு அறியப்பட்டுள்ளது

1978 மார்ச் 1]

மீன் துறையைச் சேர்ந்த சில அதிகாரிகளை கொச்சியில் உள்ள மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையத்தில் இறால் வளர்ப்பு பற்றி பயிற்சி பெற அனுப்பும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. அப்பயிற்சி பெற்ற அலுவலர்கள், தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மீனவர் குழுக்களுக்கு உவர்நீர் மீன் வளர்ப்பு பற்றி பயிற்சிகள் நடத்துவர். இப்பயிற்சி பெற்ற மீனவர்கள் அரசிடம் இருந்து ஒரு ஹெக்டேர் அளவுள்ள உவர் நீர்ப்பரப்பை நீண்டகால அளவில் குத்தகைக்கு எடுத்து அதில் இறால் மீன் வளர்ப்பை மேற்கொள்வர். தமிழ்நாட்டில் 82,000 ஹெக்டேர் உவர் நீர்பரப்பு உள்ளது. அதில் 27,000 ஹெக்டேர்கள் தான் தீவிர இறால் வளர்ப்புக்குக் கொண்டுவர தயாரான நிலையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணைக் கேள்விகள் நிறைய கேட்கப்படலாம். ஆதலால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுருக்கமாகப் பதில் சொன்னால் நல்லதாக இருக்கும்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: இந்த இறால் மீன்கள் அதிகப் பயனுள்ளதாக இருப்பது மட்டுமல்ல, அதிக வருமானம் உள்ளதாகவும் இருக்கிறது. இந்த இறால் மீன்களை பஞ்சாயத்துக்களிலே இருக்கின்ற ஊரணிகளிலே வளர்த்தால் பஞ்சாயத்துக்களுக்கு நல்ல வருமானம் வரும். இதை மனத்திலே கொண்டு அப்படிப்பட்ட காரியங்களை எல்லா இடங்களிலும் செய்ய இறால் மீன்களை வளர்க்க அரசு ஏற்பாடுகளைச்செய்யுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு உறுப்பினர் தம்முடைய கேள்வியிலேயே சொன்னார்கள். இறால் மீன்களை ஆங்காங்கே உள்ள ஏரிகளிலே வளர்த்தால் அந்தந்த ஊராட்சி மன்றங்களுக்கு அவைகளால் அதிக வருமானம் கிடைக்கும் என்று சொன்னார்கள். அதிக வருமானம் பெற விரும்புகின்ற ஊராட்சி மன்றங்கள் இந்த முயற்சிகளிலே ஈடுபடலாம்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாதிரி இறால் வளர்ப்பு நிலையங்களை ஏற்படுத்த வேண்டிய சாத்தியக் கூறுகள் என்ன, என்ன? தர்மபுரி மாவட்டத்திலே கிருஷ்ணகிரி மீன் வளர்ப்புப் பண்ணையிலே இந்த இறால் மீன் வளர்ப்பு நிலையத்தை ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற கிருஷ்ணகிரி பகுதியில் உள்ள ஏரிகளில் இந்த இறால் மீன் வளர்ப்பு நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, அமைச்சர் படித்த குறிப்பிலிருந்து பார்த்தால் சாத்தனூர் அணையிலே இந்த மீன்களை வளர்ப்பதற்கான திட்டம் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே, அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு

சாத்தனூர் அணையில் இந்த மீன்களை வளர்க்க ஏற்பாடுகள் செய்யப்படுமா? சாத்தனூர் அணையில் பிடிக்கப்படுகின்ற மீன்கள் மேற்கு வங்காளத்திற்கு அனுப்பப்பட்டு விடுவதால் உள்ளூரிலே மீன் கிடைக்கவில்லை என்ற குறை இருக்கிறது. அதைப் போக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மூலக் கேள்வி இறால் மீன் வளர்ப்பது பற்றியது.

திரு. ஏ. ராமலிங்கம்: தனியார் துறையில் உள்ள மீனவர்களும் சிறு விவசாயிகளுக்கும் இறால் பண்ணை ஏற்படுத்தினால் அரசாங்கம் அதற்கு எவ்வளவு மானியம் கொடுக்கும்? வேறு என்ன என்னவை உதவிக அரசாங்கம் தரமுடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போன்ற ஆலோசனை எதுவும் இப்போது அரசிடம் இல்லை.

திரு. நா. சுந்தரராஜ்: புதுக்கோட்டையிலே மாகனூர் பகுதியில் இப்படிப்பட்ட மீன் வளர்ப்பு நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு இங்கே பதில் வழங்கப்பட்டபோது தெரிவிக்கப்பட்ட இடங்களைத் தவிர வேறு எந்த இடங்களிலும் அது போன்ற பரிசீலனை இல்லை.

பாக் ஜல சந்தியில் மீன் பிடிப்பு.

328 வின—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ் நாட்டுக் கடற்கரை ஓரங்களில் விசைப்படகுகள் ஆழ்கடலில்தான் மீன் பிடிக்க வேண்டுமென விதியுள்ளதா?

(ஆ) பாக் ஜல சந்தியில் ஆழம் குறைவானதால் நாட்டுப் படகுகள் மட்டுமே மீன் பிடிக்கலாம் என அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: (அ) இல்லை.

(ஆ) அவ்வாறு பிறப்பிக்க இயலாது.

திரு. ரா. உமாநாத்: மெக்கனைஸ்ட் போட்ஸ், கட்டுமர போட்ஸ் இவைகள் சம்பந்தமாக, நாகப்பட்டினம் பகுதியிலே மீன்பிடிக்கும்போது மெக்கனைஸ்ட் போட்கள் இரவு நேரங்களிலே தான் செல்கிறார்கள், அப்போது இருட்டாக இருப்பதால் கட்டு